# முதல்வர் மு.க.ஸ்டாலின் - வேலூர் மாவட்டம் - மேல்மொணவூர் விழாவில் நேற்று இலங்கைத் தமிழர்களுக்கு புதிய இல்லங்களைத் திறந்துவைத்து சிறார்களுடன் உரையாடிய காட்சி!





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.9.2023) பொது மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் வேலூர் மாவட்டம், மேல்மொணவூர், இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமிற்கு நேரடியாக சென்று வீடுகளை திறந்து வைத்து, வீடுகளை பார்வையிட்டு பயனாளிகளிடம் விசாரித்தார். இந்நிகழ்வின் போது நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஜெகத்ரட்சகன், து.மு.கதிர் ஆனந்த், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார், பா.கார்த்திகேயன், திருமதி அமலு விஜயன், திருமதி ஆ. தமிழரசி, வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில்குமார், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை செயலாளர் க.நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறை ஆணையர் திருமதி ஜெசிந்தா லாஸரஸ், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.








தந்தை பெரியாரின் 145 வது பிறந்த நாளையொட்டி சேலத்தில்இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தந்தை பெரியாரின் முழு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, சமத்துவ நாள் உறுதி மொழி எடுத்துக் கொண்டார். உடன்..வீட்டுவசதி மற்றும் மதுவிலக்கு. ஆயத் தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர். எஸ். கார்மேகம் சேலம் மாவட்ட கழக செயலாளர்கள். இரா. இராஜேந்திரன் எம். எல்.ஏ.(சேலம் மத்திய மாவட்டம்) எஸ். ஆர். சிவலிங்கம் (சேலம் கிழக்கு மாவட்டம்) டி.எம். செல்வகணபதி ( சேலம் மேற்கு மாவட்டம்) மாநில தகவல் தொழில் நூட்ப அணி துணை செயலாளர். ஆ.க. தருண் உட்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர். பகுதி, கோட்ட கழக நிர்வாகிகள். அணைத்து அணிகளின் நிர்வாகிகள். உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள். இருந்தனர்.

# பிரதமர் மோடி பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, செப். 18 –

பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப்பதிவு வருமாறு:

பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்.

தாங்கள் நீண்ட ஆயுளுடனும், நல்ல உடல்நலத்துடனும் திகழ வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### காஞ்சிபுரம் - மதுரமங்கலம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில்

# பணியில் இல்லாத மருத்துவர்மீது துறைரீதியான விசாரணை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் உத்தரவு!

சென்னை, செப்.18-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சுப்பிரமணியன் நேற்று (17-9-2023) காஞ்சிபுரம் மதுரமங்கலம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது மருத்துவர் பணியில் இல்லை ஆனால் வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட்டுள்ளார்.

அமைச்சர் அம்மருத்துவரை அலைபேசியில் அழைத்து கேட்டதற்கு ஆயுஷ் நிகழ்ச்சி மாற்றுப் பணியில் இருந்ததாக கூறினார்.

மதுரமங்கலம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரசவித்த தாய்மார் ஒருவரும் மற்றும் பிரசவத்திற்கு அனுமதிக்கப்பட்ட ஒருவரும் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் மருத்துவர் பணியில் இல்லாமல் கூறும் காரணம் முன்னுக்குப் பின் முரணாக உள்ள காரணத்தினால்,அவர் மீது துறை ரீதியான விசாரணை மேற் கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க அமைச்சர் மா.சுப்பிரமணியன் காஞ்சிபுரம் மாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குனருக்கு உத்தரவிட்டார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, நேற்று முன்தினம் (16.09.2023) சனிக்கிழமை, திராவிடர் விடுதலைக் கழகம் மற்றும் கற்க கல்வி அறக்கட்டளை இணைந்து கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் தந்தை பெரியாரின் வெண்கல சிலை திறப்பு விழா மற்றும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்கும் விழா நடைபெற்றது. இதில், திமுக துணைப் பொதுச்செயலாளரும், திமுக நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கலந்துகொண்டு, தந்தை பெரியாரின் வெண்கலச் சிலையைத் திறந்து வைத்து, அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, திரைப்பட நடிகர் சத்தியராஜ், மாமன்ற உறுப்பினர்கள் ரத்னா லோகேஷ்வரன், கனிமொழி தனசேகரன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.